முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 977

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.06.2022, வியாழக்கிழமை

1. தர்மசக்தி மிகு அரங்கனே
தவசியாக வந்த தேசிகனே
ஆறுமுகன் என் சூட்சுமமே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 19 ம் நாள், 02.06.2022 வியாழக்கிழமை)
நாட்டிடுவேன் சுபகிருது விடை திங்களில்
ஞானதேசிகன் உன் மார்க்கத்தை
நம்பி உலக மக்களெல்லாம் வர
3. வருகவே உலகம் ஞான லோகமாகும்
தருகின்ற அரங்கன் தர்மத்தை தக்கபடி மாதர்ம சக்திபலமாக
ஆகவே உலகோர் ஏற்று
ஆங்காங்கே கிளைகள் நிறுவி அற்புதமாய் தர்மத்தை தொடர
4. தொடருகின்ற இந்த தர்மத்தின் பலம்
தேசமெல்லாம் தர்மசக்தியாக மாறி
வருமுலகில் வறுமை துன்பமில்லா
வளமான ஞான பூமியாக மாற்றம் தரும்
5. ஆற்றல்பட இந்த அற்புதத்தை
ஆறுமுகன் யான் அரங்கனுள் இருந்து வழிநடத்த
நடத்துகின்ற உயர் மார்க்கத்தை
ஞாலமதில் உலகோர் நம்பிக்கை கொண்டு
6. தடையின்றி தொடர்ந்து வந்து வணங்கி அரங்கன்
தக்கவழி உயர்வழி என்று தொடர்ந்து போற்ற
போற்றவே உலகோர் ஞானிகளாவர்
புகழ்மிக்க அரங்கன் ஞானம் பூவுலகமெல்லாம் பரவி
7. பரவியே இந்த உலகம் சடுதி
பாதுகாப்புமிக்க ஞான உலகமாக மாற்றம் பெறும்
மாற்றம் தரும் மகா சக்தி அரங்கன்
மக்களை காக்கும் உயர் ஞானி தேசிகன்
8. ஆற்றல்கொண்டு அரங்கனுள் யானிருக்க
அணுகினால் அனைவருக்கும் ஆறுமுகன் என்
ஆசி உண்டு உண்டு
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–